முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 09.02.2026.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

அசல் வழக்கு எண். 1/2025

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேதபுரி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பஞ்சாட்சரம் | வயது | : | 45 |
| ஊர் | : | செய்யாறு | தொழில் | : | விவசாயம் |

வா.சா. 2 (வேதபுரி): வாதி தரப்பில் இரண்டாம் சாட்சியின் குறுக்கு விசாரணை:

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம். வரை படித்துள்ளேன். இந்த வழக்கின் முழு விவரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். ஆனால் என் தகப்பனார் பஞ்சாட்சரம் தரப்பினராக உள்ளார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய தந்தைக்கு பக்கவாத நோய் ஏற்பட்டும் அவரால் பேச முடியாத நிலையில் உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளதற்கான ஆவணம் ஏதேனும் இருக்கிறதா என்றால் இருக்கிறது. வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். மேற்படி பக்கவாத நோயால் இருப்பவர்களால் இரு சக்கர வாகத்தை ஓட்ட முடியாத என்று சொன்னால் ஓட்ட முடியும். பக்கவாத நோயில் பாதிக்கப்பட்டவர்காளால் வாய் பேசமுடியாது என்றும் ஒரு கை ஒரு கால் செயலிழந்து இருக்கும் என்றால் சரிதான். அதுமட்டுமல்லாமல் முகவாதமும் செயலிழந்து இருக்கும்.

2. நான் சொல்வது பொய் என்றும் என் தகப்பனார் நல்ல முறையில் உள்ளார் என்றும் இருசக்கர வாகனத்தில் கழனிக்கு சென்றுவருகிறார் என்று சொன்னால் அவர் கழனிக்கு சென்றுவருகிறார். அவருக்கு சரியான முறையில்தான் பேச முடியாது. வழக்குள சொத்தானது முதலில் சின்னதாய் அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சின்னதாய் அம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்பதை ஊர் ஜிதப்படுததுவதற்கான ஆவணம் ஏதேனும் இருக்கிறதா என்றால் இல்லை. எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியுமா என்றால் 2 வாரிசுகள் ஆகும். மேற்படி 2 வாரிசுகள் என்று எனக்கு எதனடிப்படையில் தெரியும் என்றால் அவர்கள் இருவரும் எங்கள் ஊரில்தான் வசித்து வந்தார்கள். மேற்படி 2 வாரிசுகளான அம்மாளம்மாள் மற்றும் கனகம்மாள் ஆகிய இருவரும் வழக்கு சொத்தினை அனுபவித்து வந்தார்கள் என்பதற்கான ஆவ ணம் உள்ளதா என்றால் இல்லை.

3. அம்மாளம்மாள் என்பவருக்கு திருமணம் ஆகியதா அல்லது அவரின் கணவர் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அம்மாளம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவருக்கு வாரிசுகள் இல்லை. அவருக்குள வாரிசு இல்லை என்பதற்கான

ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. அம்மாளம்மாள் இறந்துவிட்டார் என்பதற்கான இறப்புச்சான்றிதழ் வைத்துள்ளீர்களா என்றால் இல்லை. கனகம்மாள் வழக்கு சொத்தினை அனுபவித்து வந்தார் என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. கனகம்மாள் எப்போது இறந்தார் என்றும் அவரின் வாரிசுகள் பற்றிய விவரம், சான்று வைத்துள்ளீர்களா என்றால் இல்லை. கனகம்மாளின் மகளான ரங்கநாயகியம்மாள் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்பதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. ரங்கநாயகி அவரின் தங்கை ஆவார்.ஒரு தினகரன் மற்றும் சுப்பராயன் இருவரும் எந்தவித உரிமை இல்லை என்பதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தினை மேற்படி இருவரும் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.பொதுவாக உரிமை உள்ள ஒருவருக்குதான் சொத்தினை பதிவு செய்து கொடுக்கமுடியும் என்றால் சரிதான்.

4. மேற்படி தினகரனும் சுப்பராயனுக்கும் உரிமை உள்ளது எ ன்பதால்தான் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்தனர், அதனை நான் செல்லாது என்று சொல்வதற்குன உரிமை இல்லை என்றால் நாங்கள்தான் முதலில் கிரயம் பெற்றோம் அவர்கள் கிரயம் பெற்றது எனக்கு தெரியாது. நாங்கள் எப்போது கிரயம் வாங்கினோம் என்றால் 28.07.1994ல் வாங்கினோம். 1ம் பிரதிவாதி 06.05.1994ல் கிரயம் வாங்கினார் என்றால் வழக்கு தாக்கல் செய்தபின்புதான் அது தெரியும். எனக்கு அவர் கிரயம் பெற்ற விவரம் தெரிந்தபிறகு நான் மேற்படி கிரய ஆவணம் செல்லாது என்றும் அல்லது வேறு ஏதேனும் சட்ட நடிவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நான் எடுக்கவில்லை, அவர்தான் எடுத்தார். 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்தினை நாங்கள் தடை செய்தால் அதை நடவடிக்கை எடுப்பதற்கு 1ம் பிரதிவாதிக்கு உரிமை உண்டு என்று சொன்னால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் தாவா சொத்து அம்மாளம்மாள் பெயரில் பட்டாவாக இருந்தாலும் மேற்படி அம்மாளம்மாள் தாவா சொத்தினை அனுபவித்து வந்தாலும் என்று குறிப்பிடப்படடுள்ளதற்கான பட்டா ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

5. நாங்கள் வழக்கு சொத்தினை கிரயம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களை போட்டு பார்த்து சரிபாாத்தபின்புதான் கிரயம் பெற்றிருக்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் பார்த்துதான் கிரயம் பெற்றோம். மேற்படி அவ்வாறு நாங்கள் ஆவணங்களை சரிபார்த்தபோது 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற விவரம் தெரிந்திருக்கும் என்று சொன்னால் எங்களுக்கு தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய் என்றால் சரியல்ல. அதில் 12 நபர்களும் அனுபவித்து வந்தார்கள் என்பதற்கான ஆவணம் ஏதேனும் இல்லை என்று சொன்னால் 12 நபர்களும் அனுபவித்து வரவில்லை போக்குவரத்துக்காகவும் களமாகவும் பயன்படுத்தினார்கள். வழக்கு சொத்திற்கும் கனகம்மாள் அம்மாளம்மாளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்குத்தான் சொத்து உரிமையானது.

6. நாங்கள் கிரயம் வாங்குவதற்கு முன்பு யாருடைய பெயரில் பட்டா உள்ளது என்பதனை ஊர்ஜிதம் செய்யப்படடபின்புதான் கிரயம் பெற்றோம். யாருடைய பெயரில் பட்டா இருந்தது என்றால் அம்மாளம்மாளின் கணவர் பெயரில் இருந்தது. அதற்கான ஆவ ணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கிய தேதியில் அம்மாளம்மாளுக்கோ, கனகம்மாளுக்கோ அல்லது அம்மாளம்மாளின் கணவருக்கோ அல்லது ரங்கநாயகிக்கோ பட்டா இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆனால் 1ம் பிரதிவாதிகிரயம் பெற்ற சுப்பராயன்

மற்றும் தினகரன் ஆகியோர் பெயரில் பட்டா இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. இன்றைய தேதியில் யாருடைய பெயரில் பட்டா உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். யாருடைய பெ யரில் இன்றைய தேதியில் பட்டா உள்ளது என்றால் இந்த வழக்கிற்காக பட்டா பெறப்பட்டு இருக்கலாம், பெயர் தெரியாது. இன்றைய தேதியில் யார் பெயரில் பட்டா உள்ளது என்பதை எனக்க தெரியவில்லை என்றும் ஆனால் வழக்கு சங்கதிகள் குறித்து எனக்கு தெரியும் என்று சொல்வது சரியல்ல என்றால் வழக்கு சங்கதிகள் பற்றிதான் இதுவரை நான் கூறியுள்ளேன்.

7. 1ம் பிரதிவாதி அசல் வழக்கு 350/1994 என்ற வழக்கினை தாக்கல் செய்தார் என்றும் அதன் விவரங்கள்எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல, எனக்கு தெரியும். மேற்படி வழக்கில் எதிர்தரப்பினர் ஆஜராகவில்லை. மேற்படி வழக்கு அவர் ஆஜராகவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டதற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 7 மற்றும் 8 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தற்போது 1ம் பிரதிவாதி ஆறுமுகத்தின் மனைவியான சாந்தி பெயரில் உள்ளது என்றால் எனக்கு எதுவும் தெரியாது. நாங்கள் கிரயம் பெற்ற 28.07.1994 முதல் இன்றுவரை பட்டா பெறவில்லை என்று சொன்னால் பட்டாவை நாங்கள் பெறவில்லை. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அவருக்கு உரிமையானது என்பதால் அவரின் மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் அது செல்லாது என்றும் ஆட்சேபணை தொவிக்கவும் எனக்கு உரிமையில்லை என்றால் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டாவே இல்லை. அதனால் அவர் செய்திருக்கும் ஏற்பாடு செல்லாது என்று சொல்கிறோம்.

8. 12 நபர்களில் சில நபர்கள் இறந்துவிட்டார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் 9ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளபோதும அவர்களின் வாரிசுகளை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அவர்களின் வாரிசுகள் வெளியூரில் வசித்து வருகிறார்கள். இந்த வழக்கின் வாதிகள் வழக்கு தாக்கல் செய்வதும் பணம் பறிக்கும் நோக்கத்துடன் செயல்படுவதுதான் அவர்களின் தொழில் என்று சொன்னால் சரியல்ல. 9 முதல் 11 வரை சங்கதிகள் பொய் என்று சொன்னால் சரியல்ல. நானும் வாதிகளும் கூட்டாக சேர்ந்து பிரச்சனை செய்யவேண்டும் என்பதற்காகவும் தாவா சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருவதாலும் இந்த வழக்கினை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை அனுபவிப்பதற்கு முழு உரிமை உள்ளது என்றும் அவரின் சட்டப்படி உரிமையை நாங்கள்தடை செய்வதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் நாங்கள் பட்டாவை ஆட்சேபணை செய்யவில்லை என்று சொன்னால் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது)**

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.09 18:35:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு